**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**அமர்வு வழக்கு எண். 323 / 2012. அ.சா.4. ராஜாக்கிளி, நாள் - 29.08.2024.**

**<u>சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் காயம்பட்ட என் அண்ணனை ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேனா என்றால் ஞாபகமில்லை. நான் முதல் விசாரணையில், காயம்பட்ட அண்ணனை ஆட்டோவில் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றதாக சொல்லியிருந்தால் அது தவறு. மருத்துவமனைக்கு நடத்திதான் கூட்டிக்கொண்டு போனேன். அவ்வாறு கூட்டிச்செல்லும்போது, தரையில் ரத்தம் விழுந்தது என்றால் சரிதான். நான் நடத்திக்கூட்டிக்கொண்டு போகும்போது, போலிசார் பாதுகாப்பாக வந்தார்களா என்றால் ஞாபகமில்லை. காயம்பட்ட இடத்தில் துணியைக் கொண்டு கட்ட நான் முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்சில் அழைத்துச் சென்றேன். உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையிலிருந்து 108 ஆம்புலன்சில் புறப்படும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் மாலை 6 மணியிலிருநது 6.30 மணி இருக்கலாம். நான் சம்பவ இடத்திற்குச் செல்லும்போது, போலிசார் இருந்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை. உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையில் நான் போலிசாரைப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 108 ஆம்புலன்சில் என் சகோதரை ஏற்றிக்கொண்டு போகும்போது போலிசார் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் நான் என்றைக்காவது பார்த்தேனா என்றால் என்னை மதுரையில் வந்து விசாரித்தார்கள். மதுரையில் போலிசார் என்னை விசாரிக்கும்போது, நான் சொன்னதை எழுதிக்கொண்டார்கள். அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதன்பிறகு என்னை போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில்

**சொன்னது மாதிரி, சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், நான் எந்த விசயத்தையும் அ.சா.1 விடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு சாட்சி வேண்டும்என்பதற்காக பின்னிட்டு என்னை சாட்சியாக போட்டு, அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல், என் சகோதரரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றாலும், பின்னிட்டு ஆவணங்கள் உற்பத்தி செய்யவேண்டி என்னை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.08.29 12:56:22 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**உசிலம்பட்டி.**